யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | பரதநாட்டியம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ 01 - 50 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.

01) தூக்கிய திருவடி குறிப்பது
(1) படைத்தல் (2) அழித்தல் (3) அருளல்
(4) மறைத்தல் (5) காத்தல்

02) மணிப்புரி நடனத்தில் முதன் முதலில் வைணவத்தை ஏற்றுக் கொண்ட மணிப்பூர் அதிபர்
(1) பாமஹேய்பா (2) இராஜஜுபாக்கியச் சந்திரா
(3) நம்பூதிரி (4) குஞ்சன் நம்பி
(5) கல்யாணி அம்மா

03) மகா பிராமணன்களில் ஒன்று
(1) யதி (2) களை (3) ஜாதி (4) மார்க்கம் (5) லயம்

04) கோஷயாத்ரா எனும் நூலின் ஆசிரியர்
(1) குஞ்சன் நம்பியார் (2) திருமழமங்கலம் (3) பாக்கியசந்திர மகாராஜ்
(4) அர்யுன் மகாராஜ் (5) மகராஜ்

05) திருக்குற்றாலக் குறவஞ்சியின் நூலாசிரியர்
(1) கோபலகிருஷ்ணபாரதி (2) அருணாசலக்கவிராயர்
(3) வழுவூர் இராமையாப்பிள்ளை (4) முத்துத்தாண்டவர்
(5) திரிகூடராசப்ப கவிராயர்

06) நாட்டியத்தில் சிகரம் போல் அமைந்த உருப்படி
(1) சப்தம் (2) தில்லானா (3) வர்ணம்
(4) கௌத்துவம் (5) பதம்

07) திரியசிர அரங்கம் என்பது
(1) சதுர வடிவம் (2) செவ்வக வடிவம் (3) வட்டக்களரி
(4) திறந்தவெளி (5) முக்கோண வடிவம்

08) பல பக்கங்களிலிருந்தும் ஒளி பாச்சப்படும் போது நிழல் விழாது தவிர்க்க பயன்படுவது
(1) வர்ணம் (2) அசைவு (3) திரை
(4) பரப்பு ஒளி (5) குவிந்த ஒளி

09) சங்கீத அளவுகோல் என்பது
(1) வயலின் (2) மிருதங்கம் (3) புல்லாங்குழல்
(4) வீணை (5) தாளம்

10) நவக்கிரகங்களின் தோஷங்களில் இருந்து விடுபடுவதற்காக நிகழ்த்தப்படும் சாந்திக் கருமம்
(1) பலி (2) மாந்திரீகம் (3) பூஜை
(4) வழிபாடு (5) சடங்குமுறை

11) ஹீரா பதக்கத்தை தனக்கே ஆக்கிக்கொண்ட வாக்கேயகாரரர்
(1) வழுவூர் இராமையாப்பிள்ளை (2) பாலசரஸ்வதி
(3) ஏரம்பு சுப்பையா (4) பிரம்ம ஸ்ரீ வீரமணிஐயர்
(5) மீனாட்சி சுந்தரம்பிள்ளை

12) காமன்கூத்துக்கு உரிய பிரதான வாத்திய கருவி
(1) மிருதங்கம் (2) மேளம் (3) தபேலா
(4) தப்பு (5) உடுக்கு

13) அலைபோல் அசைந்தும் பாம்பு போல் நெளிந்தும் ஆடப்படும் ஸாஸ்திரிய நடனம்
(1) மணிப்பரி (2) பரதம் (3) கதக்
(4) கதகளி (5) ஒடிசி

14) நடராஜ தத்துவத்தின் வேத நாயகனைக் குறிப்பது
(1) புலித்தோல் (2) பிறை (3) மான்
(4) சடைமுடி (5) முக்கண்

15) மோகினி ஆட்டத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்
(1) மிருணாளினி (2) தங்கமணி (3) ராகினிதேவி
(4) மிருணாளினி சாராபாய் (5) கனக்றெலே

16) ருக்குமணிதேவி அம்மையாருக்கு முதலாவது பாடமாகிய ஸரசி ஜாஷூலு எனும் சப்தத்தைக் கற்றுக்கொடுத்தவர்
(1) கௌரி அம்மா (2) அடையார் $K.$ லக்சுமணன்
(3) மீனாட்சி சுந்தரம்பிள்ளை (4) கிளியோநோர்டி
(5) அன்னிபெசண்ட்

17) அந்நிய பெண்களை தன் சாமர்த்தியத்தால் வசப்படுத்தி அனுபவிப்பவன்
(1) பதி (2) உபபதி (3) வைசிகன்
(4) திருஷ்டன் (5) ஷடன்

18) ஹாஸ்ய ரஸத்திற்குரிய கடவுள்
(1) விஷ்ணு (2) ருத்ரன் (3) இந்திரன்
(4) மன்மதன் (5) சிவன்

19) *Dance in India* என்ற நூலின் ஆசிரியர்
(1) ஜி. வெங்கடாச்சலம் (2) பாலசரஸ்வதி (3) வழுவூர் இராமையாப்பிள்ளை
(4) ஏரம்பு சுப்பையா (5) நந்திகேஸ்வரர்

20) வட இந்திய இசையிலுள்ள தும்ற, பஜன் என்பவை கர்நாடக இசையில் எவ்வகை உருப்படிகளைக் குறிக்கும்?
(1) அஷ்டபதி ஜாவளி (2) பதம் ஜாவளி (3) ஜாவளி தில்லானா
(4) வர்ணம் ஜாவளி (5) தில்லானா பதம்

21) பரத நாட்டியக் கச்சேரி முறையினை அமைத்தவர்
(1) ருக்மணிதேவி அருண்டேல் (2) பாலசரஸ்வதி
(3) தஞ்சை நால்வர் (4) வழுவூர் இராமையாப்பிள்ளை
(5) மீனாட்சி சுந்தரம்பிள்ளை

22) நடராஜப் பெருமான் திருமஞ்சனம் கொண்டருளும் இடம்
(1) கனகசபை (2) ரத்தினசபை (3) தேவசபை
(4) நிருத்த சபை (5) ராஜசபை

23) ரஸத்தோடு நேரடியான தொடர்பு உடையது
(1) விபாவம் (2) அனுபாவம் (3) வியபிசாரிபாவம்
(4) உத்தீபனபாவம் (5) ஆலம்பன விபாவம்

24) வைவர்ணம் என்பது
(1) நடுங்குதல் (2) மயக்கம் (3) குரல்மாற்றம்
(4) நிறமாற்றம் (5) வியர்த்தல்

25) ஸா , ரீ , ; க ம பா இதன் மாத்திரைகளின் எண்ணிக்கை
(1) 12 (2) 14 (3) 15
(4) 16 (5) 20

26) இறைபுகழை கவிச் சொற்கட்டில் பாடும் உருப்படி
(1) தோடய மங்களம் (2) சப்தம் (3) கௌத்தவம்
(4) கீர்த்தனை (5) பதம்

27) உபாங்கத்தில் இடம் பெறாதது
(1) கண் (2) விழி (3) புருவம்
(4) கன்னம் (5) கை

28) ஆர்யபாஷை என்பது
(1) விண்ணகத்தோர் மொழி (2) பாமரனின் மொழி
(3) உயர்குடியினரின் மொழி (4) விலங்குகளின் மொழி
(5) பறவைகளின் மொழி

29) 29 ஆவது மேள இராகம்
(1) ஸரசாங்கி (2) ஹரிகாம்போதி (3) நாகானந்தினி
(4) தீரசங்கராபரணம் (5) ஹேமவதி

30) கைசிகி விருத்தியில் ஒன்று
(1) பரவர்த்தகம் (2) சல்லாபகம் (3) சங்காத்யம்
(4) உத்தாபனம் (5) புஞ்சம்

31) மலர்களைக் கொண்டு கடவுளுக்கும் மணமக்களுக்கும் மலர் அலங்காரம் செய்வது
(1) நகை அணியும் கலை (2) உடல் அலங்காரக் கலை
(3) இலக்கிய அடிப்படைக்கலை (4) முதன்மைக் கலை
(5) அழகு தரும் கலை

32) நாட்டிய ஸாஸ்திரத்தை தெலுங்கில் மொழிபெயர்த்தவர்
(1) மானவல்லி ராமகிருஷ்ணகவி (2) பரதமுனிவர்
(3) ஆறுமுகநாவலர் (4) ஆனந்தகுமாரசுவாமி
(5) நந்திகேஸ்வரர்

33) பகுத்தறிவு எழுச்சியுறுவதற்கு அழகியற் கல்வி ஒரு நிபந்தனை ஆகும் என்ற கோட்பாட்டைக் முன்வைத்தவர்
(1) கால்மாக்ஸ் (2) லெனின் (3) காந்தி அடிகள்
(4) ரூசோ (5) ஷேஸ்பியர்

34) நடராஜர் கனகசபையில் ஆடிய நடனம்
(1) தாண்டவம் (2) லாஸ்யம் (3) நாதாந்த
(4) ஊர்த்துவதாண்டவம் (5) முனி தாண்டவம்

35) யாழ்பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் என்ற கற்கைநெறி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
(1) 1987 (2) 1988 (3) 1999
(4) 1998 (5) 2000

36) கதகளி நடனத்தில் சௌட்டிக்காரன் எனப்படுபவன்
(1) பாடகன் (2) ஒப்பனைக்காரன் (3) இசைக்கருவிகள் வாசிப்போர்
(4) நடனமாடுவோர் (5) பிச்சைக்காரன்

37) பீபத்லை ரஸத்திற்கு உரிய இராகம்
(1) லதாங்கி (2) சாமா (3) அடானா
(4) ஆரபி (5) பேகட

38) தூரதேசம் சென்ற கணவனைப் பிரிந்திருப்பவள்
(1) கலகாந்திரிகா (2) அபிசாரிகா (3) ப்ரோஷிதபத்ருகா
(4) விப்ரலப்த (5) கண்டிதா

39) அடிப்படைப் பண்கள் அல்லாதவை
(1) நைவளம் (2) மருதம் (3) செவ்வழி
(4) பாலை (5) குறிஞ்சி

40) குறிஞ்சி நில மக்களால் முருகனைப் புகழ்ந்தாடுவது
(1) ஆச்சியர்குரவை (2) வேட்டுவரி (3) வரிக்கோலம்
(4) குன்றக்குரவை (5) சாக்கையர்கூத்து

41) சங்கீர்ணஜாதி என்ற விருதுப் பெயரைக் கொண்ட மன்னன்
(1) 1ம் மகேந்திரவர்மன் (2) ராஜசிம்மன் (3) ராஜராஜன்
(4) நந்திவர்மன் (5) பல்லவ மன்னன்

42) திருமழமங்கலம் நாராயணன் நம்பூதிரி என்ற சமஸ்கிருத அறிஞரால் இயற்றப்பட்ட இலக்கியம்
(1) வியவஹாரமால (2) கோஷயாத்ரா (3) பாலரமாபந்தம்
(4) சிலப்பதிகாரம் (5) மணிமேகலை

43) நடராஜ திருவுருவத்துவத்தில் வலது அபயகரம் குறிப்பது
(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல்
(4) மறைத்தல் (5) அருளல்

44) தாளத்துக்கு முன் பாடல் ஆரம்பித்தால்
(1) அநாகத எடுப்பு (2) சம எடுப்பு (3) அதீத எடுப்பு
(4) விஷம எடுப்பு (5) ஜாதி

45) தமிழர் பண்பாட்டில் தேவாதாசிள் போன்று சப்பிரபமுவ நடன மரபின் திக்கெய் நட்டும என்பதில்
(1) மாணிக்கமகாகே (2) முல்மாத்ரய (3) பட்டுதல்
(4) யக்பத (5) யாதினி

46) நாதஸ்வரத்தின் சிறிய வடிவத்தை ஒத்தது
(1) புல்லாங்குழல் (2) கிளாரிநட் (3) முக வீணை
(4) உடுக்கை (5) சங்கு

47) கிராமிய நடனச் சூழலை அறிந்து கொள்வதற்கான ஒலிக் குறியீடு
(1) ஆந்தை அலறுதல் (2) மகுடி ஓசை (3) மணி ஓசை
(4) பறை (5) நையாண்டி மேளம்

48) திருப்புகழை அருளியவர்
(1) மணிவாசகர் (2) சம்பந்தர் (3) அருணகிரிநாதர்
(4) சேக்கிழார் (5) சேந்தனார்

49) புறுகு எனும் மரத்தைப் பயன்படுத்தி ஆபரணமாக அணிந்து கொள்ளும் சாஸ்திரீய நடனக்காரர்
(1) குச்சிப்புடி (2) மணிப்புரி (3) கதக்
(4) கதகளி (5) பரதநாட்டியம்

50) அபிராமி அந்தாதி பாடலை அருளியவர்
(1) கனம் கிருஷ்ணையர்
(2) முத்துத்தாண்டவர்
(3) மாரிமுத்தாபிள்ளை
(4) அபிராமிப்பட்டர்
(5) திருமாளிகைத்தேவர்